உ

சிவமயம்.

# சூரிய நமஸ்காரப்

## பதிகம்.

T. சாரதா புத்தகசாலை அதிபர்

T. S. துரைசாமி முதலியாரால்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

முரஹரி அச்சுக்கூடம், சென்னை.

# பகவத்கீதை வசனம்.

---

பாக்கெட் சயிஸ் 18-அத்தியாயங்களும் அடங்கியது.

இதில் வேதாந்த ரஹஸ்யத்திற்கு உபமானமாய் ஸந்தர்ப்பானுசாரமாய் உபநிஷத் வாக்கியங்களாக ஆங்காங்கு உபஹரிக்கப்பட்டிருக்கின்றது.

யோகஞானங்களை விளக்கிக்காட்டும் நூற்களில் இவைகளே முதன்மை பெற்றனவாம். அலையுமனத்தை அகத்தில் அடக்குவதற்குபாய பெரிய கருவிளாகும்கற்றோரேயன்றி மற்றோருங் களிப்புடன் வாசிக்கத் தக்கனவாம். ஏழைகளும் எளிதில் வாங்கும்பொருட்டே பாக்கிட் சயிஸில் விலை மிகவும் சகாயமாய் ஏற்படுத்தப் பட்டது.

இதன்விலை அணா 8.

ஷை பெரிசு 1 8 0.


**T. சாரதா புத்தகசாலை,**

மின்ட் போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

# சூரிய நமஸ்காரப் பதிகம்.

காப்பு-நேரிசை வெண்பா.

மின்னுஞ் சூரியன்மீது மேவச்சிறுபதிகம்
பன்னும்படியெனக்குப் பாலிப்பாய் துன்னங்
கடவாரணனே காண்பரிய காரணனே
யிடமாகுமுன் மறைத்தாள்.

ஆசிரியவிருத்தம்.

விதிவெளி யாகாசமீதிற்பிரகாசமாய் மெய்ஞ்ஞான தீபசுடராய் வெளியாகி யொளியாகி விந்துசுழி முனைமீதில் விளையாடு மோங்காரமாய், ஓது முதலெழுத்துபதேச மந்திரமுறைக்கின்ற சற்குருவுமாய் உருவாகி யுயிராகி யுயிருக்குளறிவாகி யூடாடிநின்றவுணர்வாய், ஆதி முதலாகவள சண்டபகிரண்டங்க ளாயிரத்தெட்டுமாகி, அறுநூற்றிருபத்து நாலுபுவனங்களுமாண்ட மயமான திறமாய், சோதிமயமான பரிபூரணவிலாசமிகு சூட்சாதமீதேறியே துலங்குகதிர் மதியென விளங்குசிவ சங்கர சூரியநாராயண சுவாமியே. 1

இன்பசுகமாகவும் பூமியாகாசமு மேகாந்தவைபே கமு மீரேழுபதினான்குலோகங்க ளத்தனையுமிரட்சிக்கு மீஸ்வரனுமாய், அம்பாதிகம்பரபரம்பர வநாதகவநாதி யொளியான வெளியா னந்தநடனமிடு முத்தண்டமா கவே யாடிய்சபாபதியுமாய், வம்பரொடு காலனெம தூத ரணுகாமலே வந்தருள்புரிந்து நிதமும் வளர்கின்ற கை லாசபரமபத கொடிமுடியின வரையினை வணங்கிமுடி வார், துன்பமெனு நரகவழி விழாமல் ரட்சியுஞ்சோதி ரதமீதேறியே துலங்குகதிர் மதியெனவிளங்கு சிவசங் கர சூரியநாராயண சுவாமியே. 2

உக்கிரமிகுமக்கினி சொரூபவடிவாகியே யோங்கா ரரூபமாகி யொளியாகி வெளியாகி யுதயகிரிமீதினி லுதிக் கின்ற தெய்வமாகிச், சகலபுவனங்களுக் தானாகிநின்ற வொரு சச்சிதானந்தமயமாய்ச் சாலோக சாமீப சாரூப சாயுச்ய சகலசூட்சுமதாரியாய், விக்கிரசிவலிங்கவடி வா கவுமிருந்த சதுர்வேதாந்தமூர்த்தி முதலாய் வெகுகோடி காலங்களுன்னையே நம்பினேன் வேதனே பரநாதனே, சக்ரகெம்பீரபரி பூரணவிலாச 0 வர்ச்சுனன் மீதேறியே துலங்குகதிர் மதியெனவிளங்குசிவசங்கர சூரியநாராய ண சுவாமியே. 3

---

0 அர்ச்சுனன்-மச்சை.

சாஸ்திரபுராணமுதல் வேதவேதாந்த மிகுசர்வத் தபோதானர்களுஞ் சகலமாதேவருஞ் சகலமாமுனிவருஞ் சகலசீவன்களுடனே நேத்திரமதாகவே சூறியாகி நெறியாகிநிருமலசொரூபமாகி, நிகழும்சிருஷ்டி திதி சம்மாரவதிகார நின்றதிரு மூர்த்தியாகி, காத்திரமதா யைந்து பஞ்சபூதங்களுங் கருணைகடாட்சமுடனே கண்டுகளிகூர்ந்திடும் விண்டபரிபூரண கலைக்கியானவேத முதலே, சூத்திரந்தாவி விளையாடுமோனந்தச் சுபம்புரதமே றியே துலங்குகதிர்மதியெென விளங்குசிவசங்கர சூரியநாராயணசுவாமியே. 4

நிறைபானசுக்கிலஞ் சுரோணிதங் கருவூரினின்று மொன்றுகவேதான், நிலையான மூக்கோண சக்கரந்தன்னிலே நிதாகாரகமலமீதில், மிறைவானநிலைவிடு மறுகோணமாகியு மாங்கார வோங்காரமாய் ஆடிவிளையாடி நட்மாடிய பராபரர் வச்சுதானந்தமெனவே: குறையான வன்னியின்கெற்பமதில் வாசமுங்குடியாக மூன்றுநூறு நாட்கொண்டவோர் தாவதனை விண்டுபின் பூமியிற் குழந்தையாய் வந்துவளரும், துறைபான பாதவழிவிழாமல் செயசொர்ன ரதமீதேறியேதுலங்கு கதிர்மதியெனவிளங்கு சிவசங்கர சூரியநாரியண சுவாமியே. 5

ரத்தமொடு மாமிசமுவத்தியொடு ரோமமுநரம்பு
தோலெலும்புமயிரும் நாடியொடு சிலேட்டுமம் வாத
பித்தங்களுங்நாரும், ஸ்ரீதசவாய்வுடன், சுத்தபரிசுத்த
ஞெடு ரூபரசகெந்தமுஞ் சகலாதிதப்பொருளுமாய்ச் சர
ணாவிந்தமிருகண்களிரு வகைபுமாய்ச் சார்வையிருநாபி
யுடனே. உற்றகமலந்தனிலுற்ற வுயிராவேவளாடியின்
றவுணர்வாய் ஓங்காரரீங்கார வாங்காரரூபமா யோரெ
ழுத் தாகவேதான், சுத்தகெம்பீர பரிபூரணவிலாச வெ
குசுட்சாதமீதேறியே, துலங்குகதிர்மதியென விளங்கு
சிவசங்கர சூரியநாராயணசுவாமியே. 6

நிலையிலாச் சமுசாரவாழ்வை நிஜமென்றெண்ணிநி
னைவு தமோமுமலும், நிஜரூபமாகவே சாட்சிதந்தெனை
யாண்டு நியமிக்க விதுசமயமே, அலையாமலிரேழுபதினா
ன்குலோகமுமணுவுக்குளணுவர்கியே அரியபாபிரமமா
தியவதார ஞிங்காரவகோர வக்கினிரூபமாய் மலையாள
கைலாச கிரிகளொடுபரமபதம்மகமேருவை குந்தமும்
வசமிகுவானதொரு வீதியாகாயமதில் வளரும் பிரகாச
வொளியே தொலையாத சனனமதில் முன்செய்த தீவி
னைத்துயர் தீராதமேறியே துலங்கு கதிர்மதியென விள
ங்கு சிவசங்கரசூரியநாராயணசுவாமியே. 7

வழியென்றதுறைக நிலைகளறியாமலே மனதுமிக வெகலங்கி, மாதர்தன்சுகமான வாசைதனைநிஜமென்று மண்ணுலகிலேயலைந்து, பழியென்றதீவினையகற்றிவிடு முன்பாதம் பணியவேயருளுமில்லான், பாழுமென்மனக் குவிடவொன்று தரிதம்படனம் பண்ணுவதுனக்கருமை யோ, விதியென்ற கண்ணொளியாகவே நின்றுவினையாடு மணிரூபமாகி, மேலான செல்வமது தந்தருள்புரிந்திடும் வேதவேதாந்த முதலே, சுழியென்றமுனை மீதிலோங்காரமானவதிசூட்சம் ரதமிதேறியே துலங்குகதிர்மதி யெனவிளங்கு சிவசங்கரசூரியநாராயணசுவாமியே. 8

அட்டதிசை பெட்டெட்டன் பதினாறுகோடுமகண்டதொரு காலமீதில், ஆகாசமீதில்வெகு சோதிப்பிரகாசமாயலங்காரதீபசுடரே, கட்டமதுவான தொருகவலையினி தீரவுன் கருணைகடாட்ச முடனே கனயோகஞானமது சேவடிகடந்துநீர் காத்துரட்சித்தருளவே, இட்டகுல தெய்வம்நீ ரெந்தனுள்ளத்திருந்துவிளையாடுமவர்நீ, இன்பசுகபோகமுஞ்சம்போக போகமு மேகாந்தவைபோகமுநீ, துட்டகலிகாலமது வென்னை வந்தணுகாது

துணையாகாதமேறியே, துலங்குதிமிர்மதியென விளங்குசிவ சங்கரசூரியநாராயணசுவாமியே. 9

தங்கபுங்கனக கோபுரவிமானமுஞ் சதுர்வேதமேற் கலசமுக், தளதளெமின்ன லொளியான நவரத்தினந் தரித்த மதிவசிகம்பமும், அங்கமுறுதாக் லுறுமனவேக முக்குதிரையாங்கார வோங்காரமா யைந்தெழுத்தாய் நின்ற மந்திரசொரூபமதி லருணனே சாரதியுமாய்ச் சங்கழமென்னுள்ளே வண்டிலகட்டாணியைத்தியான மதி னுலிருக்குந், திணந்திணமுமெந்தனிட சிந்தையிலிருந்தருளதிகம் பாமுமான பொருளே, துங்கபரிபூரண விலாசவொளிபாவேக சுயம்பிரதமீதேறியே, துலங்குகதிர் மதியெனவிளங்கு சிவசங்கரசூரியநாராயண சுவாமியே.()

சூரியநமஸ்காரப்பதிகம்.

முற்றிற்று.